ஓலை 35 | ஓசை 132 | மார்ச் 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால்,
ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது
வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence
there is none equal to that of being free
from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

**நிர்வாக குழு**

**கு.செல்வமுத்துக்குமரன்**

**சிவம் அறக்கட்டளை**

**ஆசிரியர்கள்**

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

**வடிவமைப்பு**

**அ.வில்சன்**

## அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

## அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கட்டிய கோட்டைகள் கைவருமா

நமக்குமே கனவுகள் இருந்திடும் என்பதை
நாளைய உலகமும் உணர்ந்திடுமா?
சமையலும் குடும்பமும் பூட்டிடும் விலங்கினை
தகர்த்திட வழிகளும் கிடைத்திடுமா?
அமைதியும் பொறுமையும் பெண்களுக் கழகென
அடக்கிடும் நியதிகள் ஒழிந்திடுமா?
குமைந்திடும் எண்ணமும் குளிர்ந்திடும் வகையிலே
கொடுக்குமா விடுதலை செயலாற்ற?



எத்தனை ஆண்டுதான் போலியாய் புகழ்ந்துநீ
எங்களின் வாழ்வையும் சிறைவைப்பாய்?
முத்தென ஒளிரவே எங்களின் முயற்சியை
முடக்கிடும் உரிமைகள் யார்கொடுத்தார்?
மெத்தனப் போக்கினை மாற்றிடும் வலிமையும்
மிளிருமா பெண்களின் நடைமுறையில்?
பத்தொடு எண்களாய் வாழவா வாழ்க்கையை
பாரிலே நாங்களும் அடகுவைத்தோம்?

ஆண்டினில் ஒருமுறை வாழ்த்திடும் வாழ்த்தினில்
அடங்கிடா இலக்குகள் அடங்கிடுமா?
காண்பதும் வேறுதான் காட்சியும் வேறுதான்
கட்டிய கோட்டைகள் கைவருமா?
மாண்டிடும் வரையிலே மக்களே உலகென
மதுவினை வைத்ததன் பொருளென்ன?
வேண்டுமே புத்துயிர் விருப்பமாய் சிறகுகள்
விரித்துதான் வானிலே பறந்திடவே

*மக்கள் - பிள்ளைகள்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# வானளக்கும் வாழ்வில்

உயரப் பறக்கும் ஊர்க்குருவி
ஒற்றைச்சிறகில் வானளக்க ஆசை
வேடன் விரித்த வலைக்குள்
சிக்கிக்கொண்ட இறக்கை
ரணமாகி உதிர்ந்த போதும்
முயற்சிகளை இழக்காமல்
வானத்தை வட்டமிடுகிறது.
வல்லூறுகளின் பார்வையில்
வசமாய் மாட்டிக் கொண்டாலும்
சிறகின் வேகத்தில்
வானத்தில் சுழல்கிறது குருவி
காற்றின் கடும் புயலும்
பார்வைக்குள் புலப்படாத
பட்டினி வயிறுகளுமென
தேடலைத் தொடரும்
குருவியின் வாழ்க்கையில்
வல்லூளுகளென வல்லரசுகள் துரத்துகையில்
ஆகாயவெளிகளும் கல்லறைகளாகலாம்
நெடுஞ்சாலைக்குள் புதையுண்ட
மரங்களின் பசுமை தேடியும்
பருவமாற்றப் புயல்களுக்குள்
பரிதாபமாய் மாட்டிக்கொண்ட
கூடுகளைத் தேடியும்
விடாமல் துரத்திக் கொண்டிருக்கும்
ஊர்க்குருவியின் பெயரை
உழவனென்றோ வறுமையென்றோ
வரிக்குள் தொலையும் வாழ்வென்றோ
வாசித்துப் பார்ப்பது அவரவர் மனமென்க.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# யார் உன் எதிரி?

புலன்கள் எதிரி!
புலனடங்காமை சகுனி!
மயக்கம் முயக்கம் எதிரி!
முடக்கம் சுணக்கம் எதிரி!

முயலாமை எதிரி!
முன்கோபம் எதிரி!
உனக்கு நீயே எதிரி!
உண்மை உணரும் வரை புதிரி!?



உள்ளூர கணக்கிலடங்கா எதிரி!
உறவுகள் எதிரி! உணர்வுகள் எதிரி!
பயம் எதிரி! பாமரம் எதிரி!
பதவியும் எதிரி! பணமும் எதிரி!

தூணிலும் துரும்பிலும் எதிரி!
துணையேது மில்லா வாழ்க்கையிது!
வருவதும் போவதும் தனியே!
ஆட்டமும் போராட்டமும் தனியே!

தீதும் நன்றும் பிறர் தர வாரா!
அழுக்காறு அவா வெகுளி இன்னாசொல் எதிரி!
நெடுநீர் மறவி மடிதுயில்
அடங்காமை என எண்ணிலடங்கா எதிரி!

அதிவேகம் எதிரி! ஆமைவேகமும் எதிரி!
கண் முன்னே சில எதிரி!
கண் காணா பல எதிரி!
நித்தம் நித்தம் புது எதிரி!

பொறுமையும் புலனடக்கமும்
இன்சொல்லும் மாசறதுலும்
புன்னகையும் இவையாவுமே
உன்னிடமி ருக்கும் தந்திரி

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# கண்ணீரின் கடைசிச் சொட்டு



ஆழ்கடல் கொஞ்சம்
வருத்தப் படட்டும்
அவள் அன்பு

முல்லை சொந்தமானதாக
இருந்தாலும்,
மாற்றான் தோட்டத்து
மல்லிகையே
அதிக வாசம் வீசுகிறது

கல்லறைக்குக்
கொண்டுச் செல்லும்
பூமாலையின் வாசம்
வீடேங்கும் வீசும்
அவர்கள் நம் மேல்
வைத்திருந்த பாசம்

கண்ணீரின் முதல் சொட்டை
கண்கள் மறந்தது,
கண்ணீரின் கடைசிச் சொட்டு
கண்களையே மறந்தது

அவளோ
மனதிற்கு
விலங்கிட்டு
கண்களுக்கு
விடுதலைக்
கொடுத்தாள்,
நானோ
கண்களுக்கு
விலங்கிட்டு
மனதிற்கு
விடுதலைக்
கொடுத்தேன்

கவிஞர் இரா.மதிராஜ்

# கிராமியப் பாடல்

## தாயின் தாலாட்டு



சித்திரப் பூந்தொட்டிலிலே
தித்திக்கும் செல்லமுதே
கொவ்வை இதழ் குவித்து
சித்திரமே
கண்ணுறங்கு.

வயக்காட்டு மரத்தினிலே
வாகானத் தொட்டிலிலே
வாசக்காற்று தழுவிடவே
வசந்தமே நீ கண்ணுறங்கு.

பச்சை இலுப்பை வெட்டி
இச்சையுடன் தொட்டிலிட்டேன்.
இச்சைக்கிளி நீயும்
இன்பமாய்க் கண்ணுறங்கு.

கட்டிப் பசும் பொன்னே
கனகமணி இரத்தினமே
கன்னலாக வந்தவளே
களைப்பு நீங்க கண்ணுறங்கு.

குயில் கூவும் சோலையிலே
மயிலாடும் வேளையிலே
எழிலான தேவதையே
ஒயிலாக கண்ணுறங்கு.

பட்டாலே தொட்டில் கட்டி
பாசமுடன் ஆட்டுறேனே
பால் குடித்த அசதி நீங்க
பவளமே நீ கண்ணுறங்கு.

வண்டாடும் சோலையிலே
வண்ணப் புறா தாலாட்ட
வாடாத மல்லிகையே
வனப்புடன் நீ கண்ணுறங்கு.

அம்மாவின் சேலை வாசம்
ஆனந்தமாய் நீ நுகர்ந்து
அம்மா நானாட்ட
சுகமாக நீ, கண்ணுறங்கு.

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# நேர்த்திக்கடன்


குளத்தில்
இறங்கும் போதே
ஏற்கனவே
குளித்துக்கொண்டிருப்பவர்
சொல்கிறார்.
குளத்தில் பாசிகள்
நிறைய இருக்கிறது
பார்த்து இறங்கும்படி.
கவனமாய்க்
குளத்தில் இறங்கி
குளித்து முடிக்கிறேன்.
நெடுநாளைய நேர்த்திக்கடன்
நிறைவேறியதாக
அம்மாவின் முகத்தில்
புன்னகை.
வெள்ளிச்செதில்கள்
மின்ன மீன்களும்,
துள்ளலாட்டம்
போட்டுக்கொண்டிருக்கும்
தவளைகளும்
நிறையவே காணப்படுகின்றன
பாசிகள் படர்ந்த
அந்தக்குளத்தில்.
அவையின் நேர்த்திக்கடன்
எப்போது
நிறைவேறுமென்று
தெரியவில்லை எனக்கு.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# தாலாட்டுப் பாடல்

ஆராரோ ஆரீராரோ
கண்ணே நீ கண்ணுறங்கு
ஆரடிச்சு நீ அழுதாய் மகளே
நீ கண்ணுறங்கு என் தங்கமே கண்ணுறங்கு
கண்ணே தொட்டாரைச் சொல்லியழு
கண்ணே அடிச்சாரை சொல்லியழு
மாமன் அடித்தானே
மல்லிகைப் பூ சென்றாளே
அத்தை அடித்தாளோ
ஆவாரம் பூ கொம்பாலே
பாட்டி அடிச்சாளே கிலுகிலுப்பைக் கொண்டு
கண்ணே நீ கண்ணுறங்கு
சித்திரப்பூத் தொட்டிலில் ஆட்ட மாமன் வருவான்
கிளியே கண்ணுறங்கு நீ
பட்டு வண்ண ரோஜாப் பூவே
நீ தேம்பி தேம்பி அழாதே
ஆனந்த முத்தே பவளமே
நீ கண்ணுறங்கு



உன் பக்கத்தில் எல்லோரும் இருக்க உனக்கு ஆனந்தமே
கிளியே ஊரே தூங்க நீ
தூங்கவில்லை
மானே மயிலே மரகதமே
தகப்பன் முத்தம் கொடுத்து
தாய் அரவணைத்துச் சென்று தொட்டிலில் போட
தொட்டிலில் மணியின் ஓசை கேட்கும்
இன்னிசையில் நீ கண்ணுறங்கு
ஆராரோ ஆரீராரோ
என் தங்கமே முத்தே கரையாமல் தூங்கியெழு

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# கல்லூரி நாட்கள்!

அடி மனதில் ஆணிவேராய்
பதிந்ததுவே கல்லூரி நாட்கள்
கண் மூட முடியவில்லை
கண்ணுக்குள் அதன் நிழல்கள்
செதுக்கப்பட்ட முத்துக்களாய்
கரும்பலகை எழுத்துக்கள்
அழியா ஓவியமாய்
அரங்கேறிய கலை நிகழ்வுகள்
பட்டாம் பூச்சிகளாய் நாம்
கைகோர்த்து நிமிடங்கள்
நடுநிசி தெரியாமல்
பரீட்சைக்காக படித்த இரவுகள்
கண் மூடி நினைத்துப் பார்
நம் கல்லூரி நாட்களை.



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் இலங்கை

# தன்னிகரில்லா பெண்[மை]

அகத்தினில் நல்லறம் கொண்டு
இகத்தினில் இன்பங்கள் கண்டு
உவகையுடன் பணிகள் தினமும் செய்து
எல்லோர் உள்ளங்களையும்
கொள்ளை கொள்பவள் அவள்

தாய் தமக்கை சகோதரர்கள் என்று
தனது உறவுகளோடு
மாமி மதினி மாமனாரென்று
புது உறவுகளையும் ஒன்றெனக் கருதி
இரு குடும்பங்களின் பாலமாய் நிற்கும் அவள்
என்றும் குடும்பத்தின் குல விளக்கு



கணவருக்கும் பிள்ளைகளுக்கும்
கண்ணும் கருத்துமாய் காரியங்கள் ஆற்றிடுவாள்
கேள்விச்செவியனாய் எல்லோர் குத்தல் வார்த்தைகளையும் தாங்கி
கொள்கையில் என்றும் நிலைத்து நிற்பவள் அவள்

வேதனைகளைச் சோதனையெனக்கொண்டு
சுமைகள் எல்லாம் இன்பமெனக்கண்டு
வாழ்க்கையை சவாலாய் ஏற்றிடும் அவள் - என்றும்
வாழ்வின் இலக்கணமே !

தூக்கம் துறந்து பசி மறந்து
தரணி வாழ விதை விதைத்தவள்
தாயாய் செவிலியாய் உற்ற துணையாய்
தமக்கையாய் மதினியாய் மண்ணில் என்றும்
தியாகத்தின் இருப்பிடம் அவள்தான்
தன்னிகரில்லா பெண் (மை )

கவிஞர் எம்.சி.மஹ்மூதா ஏ றஹ்மான்,ஒலுவில்

# நட்பு

எங்கோ பிறந்தோம்
எங்கோ வளர்ந்தோம்
ஏன் என்று தெரியாமல் பேசினோம்
எதற்காக என்று அறியாமல்,
ஒருவரை ஒருவர் தேடினோம்
தேடல் எல்லாம் முடிந்தது போல
உரையாடல்களில் உறைந்தோம்
மௌனமாய் ஒரு மொழியாடல்
கதைகள் சொல்லும் கவி பாடல்
சண்டைகளில் சத்தம் இல்லாத யுத்தங்கள்
போர்களையும் வெல்லும் அதன் சொல்லாடல்
அமைதியாய் சில நிமிடங்கள்
சொல்லியது சில மெய்களை
பிரியாத உறவாக வருவாயா
உறவாக என் உடன் இருப்பாயா
கேள்விகள் எல்லாம் தொடர்ந்தாலும்
தொலையாமல் தொடரும் சில
முற்று புள்ளிகள்
அன்பு ஒன்றில் ஏது எல்லை
அதில் வாழ்வது மட்டும் வாழ்வின் எல்லை!



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# பிறந்தநாள் இன்று பிறந்தநாள்

பிறந்தநாள் இன்று பிறந்தநாள் என்றவந்த
பாடல் கேட்டு வளர்ந்தவர்களுள் நானுமுண்டு!
பிறந்தநாள் எனக்கு யாரும் கொண்டாடினரா
பிள்ளைப் பருவத்தில், அறியேன் அடியேன்!

ஆறாம் வகுப்பு மாணவனாய்ப் பிறந்தநாளில்
ஆமவடையை எம்பள்ளி சிறுகடையில் சில்லறை
செலவில் சுற்றமாய் இருந்தசில நண்பர்க்கு
சத்தமின்றி வாங்கித்தந்து கொண்டாடியது நினைவிலுள்ளது!

"மறுபடியும்" என்றொரு திரைப்படத்தின் பாடலொன்று
மனத்தில் பதிந்து ஏதேதோ செய்தது;
அப்பாடலும் பிறந்தநாள் பாடல்தா னென்றாலும்
அப்பாடலின் நாயகன் அரவிந்தசாமி அப்படநாயகி
ரேவதி நடிப்பில் "நலம்வாழ எந்நாளும் என்வாழ்த்துகள்"
ரிங்காரமிட இன்றும் என்னுள், சிலநேரங்களில்
அரவிந்தசாமியாய் என்னைநான் பொருத்திப் பார்க்க
அந்தப்பாடல் தூண்டுகிறது; எனக்கு யாருமதுபோல்
பாடியதில்லை;அடியேனும் யாருக்கும் அதுபோல்
பாடியதில்லை ஆயினுமிப்படிப் பாடிக்கொண்டா டுவதில்
தவறில்லை என்றே அடியேன் எண்ணுவதுண்டு!



இன்றோ பிறந்தநாள் விழாக்கள் படுவிமர்சையாய்
இல்லத்தைத் தாண்டி ஐந்து நட்சத்திர
விடுதிகளில் கொண்டாடப் படுவதும் கொண்டாடுவோர்
விதவிதமாய்ப் பெரும்பணச் செலவில் ஏழையெளியோர்
இதயம்நொறுங்கும் வண்ணம் கொண்டாடு வதுமேனோ?

அன்புமிகு நங்கையொருவள் தன்பிறந்தநாளில் மகிழுந்தில்
அன்னம்கொண்டு சென்றுவழங்கிய தறிந்துவடித்தே னிக்கவிதை!
பிறந்தது இறக்க என்பதைநினைவில் கொண்டுநாம்
பிறந்தநாளன்று, இறந்தபின்பு புண்ணியவுலகு செல்லவிரும்பி
பசியால் வருந்திவாடும் ஏழைகளுக்கும் உறவற்றோர்க்கும்
அன்னமீந்து ஆதரவளித்தால் ஆண்டவன் ஆசிர்வதிப்பான்!

கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# துளிப்பாக்கள்

அம்மாவின் கண்ணீர்
கடைசி சொட்டும் வீழாமல்
அப்பாவின் தியாகம்

அப்பாவின் தியாகம்
அனைத்திற்கும் ஆதாரமாய் அமுதூட்டும்
அம்மாவின் புரிதல்

ரசிக்கும் அம்மா
எல்லை மீறி எரிச்சலூட்டும்
குழந்தையின் அத்துமீறல்கள்




குப்பைத் தொட்டி
எல்லோருக்கும் ஏதோ அதில்
பொறுக்கும் கனவுகள்

நிழல் தரும் மரம்
பெருமையாய் நினைவில் இனிக்கிறது
தாத்தாவின் தன்னார்வம்

எதிர்காலக் கனவுகள்
நிகழ் காலத்தில் புதைகின்றன
ஓட்டுக்கு துட்டு

இணைய மோசடிகள்
அமோக வளர்ச்சிற்கு உரமிடும்
கவர்னரின் கையெழுத்து

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# முடியாத ஒன்று



எல்லாவற்றையும்
என்னால்
கட்டுப்படுத்த முடியும்.
இதயத்தின்
விசும்பலையும்
அதன்
விவாதங்களையும்
இன்னோரன்ன
முறைப்பாடுகளையும்
எல்லாவற்றையும்
எனக்குள்ளே
புதைத்துக்கொள்ள முடியும்.
வெடிக்கும்
ஆக்ரோசங்கள்
வெள்ளந்தி
அனுதாபங்கள்
வதைக்கும்
வேதனைகள்
எனக்குள்ளே
எல்லாம்
மூடி வைத்துக்
கொ(ல்ல)ள்ள முடியும்
காலாவதியான கையசைப்புகள்
கத்திரிக்கும் கோரங்கள்
இரணங்களாலான வடுக்கள்
இப்படிப் பலவற்றையும்
பலவாறு
தேற்றி ஆற்றிக்கொள்கையில்.

ஒன்றை மட்டும்
கட்டுப்படுத்த முடிவதில்லை.
எப்பாடுபட்டாவது
எல்லா முனங்கல்களையும்
என்னுள் அடங்கச்செய்ய.
முட்டிக்கொண்டு
முதலாவதாய்
முன்னே நிற்கிறது
இந்தக் கண்ணீர்!

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# என் இனிய தனிமையே

என்னுள் மூழ்கி
என்னை உணர!
என்னைச் சுற்றி நடக்கும்
ஏராள நிகழ்வுகளை சீர்தூக்கி,
என்னால் இயன்றதை
எடுத்து உணர்த்திட!
என்னைப் பக்குவப்படுத்த,
என்னுடன் இறுதி வரை
என்றென்றும் பயணிக்கும் தனிமை
எனக்கு இனிமை!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# துயரம் ஏன்?

துயரம் துயரம் தூக்கத்தின் சொற்பனையிலும், சொற்பொழிவிலும்,
சொல் இல்லாமல் விளையாடுதே இந்த துயரம்.
பிறந்த முன் பகுதியில் அறிய முடியவில்லை,
அலங்கார துயரம்.



அறிவுடன் ஆறாம் அறிவும் கலந்த
உடன் புரிந்தது இந்த துயரம்.
ஏன் இந்த வாழ்க்கை? யாரால் நிறுவப்பட்டது?
எதற்காக தீட்டப்பட்டது ?

ஒவ்வொரு கணமும் கண்ணீருக்கு விடை தெரியாமல்
கலங்குதே பல துயரக் குருதிகள்.
பிறந்தவுடன் அறிந்தானோ
இவன் கீழ் இவன் மேல் என்று

கடைக்கோடியில் பலர் அலை போல்
ஆறுதல் தேடி துயரத்தின் விளிம்பில்
கோடியில் சிலர் அந்த அலையையும் அடைத்து
கலங்குதே கடை விழுநீர் கானலுடன் சேர்ந்து.

காலம் முழுவதும் பல கலங்கரையில் கால் வைக்க முடியாமல்
உள்ளோர் பட்டதோ நல்லதோர் நயம் நாட்டில்
ஆயிரமாயிரம் துயரம் மாய விந்தையில்
விதவிதமாக துயரத்தின் தொந்தரவு

செவிக்கும் புவிக்கும் சிரிக்குதே துயரத்தின் நாட்டிய அழகு
உள்ளுணர்வு உறவுகள் கொண்டு குடும்பம் கண்டு
பல்வேறு நிலை கொண்டு காதல் கொண்டு மரணத்தில் நின்று

சிரிக்குதே துரோகத்தின் துயரம்
பூமி பிளவு பட்டதால் நீ யார் நான் யார் பிளவுபட்டதோ கூற்று
எல்லாம் உண்டு உடைத்தவனே இன்று
உன் மரணத்தில் அது என்னவென்று

மூடன்
ஆண்டவன் அறிந்தானோ ஆதிக்கத்தின் ஆத்மாவில்!
ஒரு நா வயிற்றுக்கு ஏராள வஞ்சம்
தெரு நா அறியுமா ஆறுதல் தஞ்சம்
நாட்டில் நா ஏனடா திண்மை லஞ்சம்
நிலைக்குமா நா உயிர் நீ கொஞ்சம்.
கா நா விடுமா, உலகு உரை நா தருமா! பொழுது!

என் உயிர் கொண்டு மன்னுயிர் கண்டு
மரணத்தையும் வெல்லுமோ இந்த துயரம்
தொடர்ந்து கொண்டே இருக்கும்
இந்த ஜொலிக்கும் புவியில்
துயரக் கதைகள் ஏராளமாக.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# ஹைக்கூ

1)
கோடையில் மழை
வாசம் வீச தொடங்குகிறது
பச்சையம் இழந்த நிலம்!


2)
கடற்கரையில் மக்கள் கூட்டம்
வானில் பறந்தபடி இருக்கிறது
பருந்து .. (ட்ரோன் கேமரா)

3)
கரையொதுங்கிய சிப்பி
திறந்து பார்க்கிறேன்
சிப்பியளவு கடல்!



4)
சுழலும் மின்விசிறி
கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது
தேனீர்க் கோப்பையின் சூடு!

5)
பள்ளி வளாகம்
பாடம் நடக்கிறது
மரத்திலமர்ந்தபடி கரையும் காகம்.



6)
வைரமாய் கொலிக்கிறது
இரவு பனித்துளியில் நனைந்த
தும்பியின் இறக்கைகள்.

கவிஞர் ச.ராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# மாறா நேசமே!

அலைகடல் நடுவினிலே
அமிழ்ந்து போகையில்
கரம் நீட்டி கரம் சேர்க்க
துடித்திடுதே!

அகிலமும் நீயே
என் உலகமே நீயே
என வாழ்ந்திடும் வாழ்வில்
உன்னிடம் சேராது
செல்வேனோ!

வீணென்று ஒடுங்கி
கிடந்த எனை
உன் அன்புலகில்
என்னை தத்தளிக்க விடாது
தக்க வைத்துக்கொண்ட
உன் நேசத்தை தாண்டி
சென்றிடுவேனோ!

என் சோகங்களை மறைத்து
வைத்திடாது
உன்னிடம் கொட்டி
உன் மடி சேராது
செல்வேனோ!



அன்பெனும் உன் அருவியில்
நனைத்திட்ட எனை
உன்னை விட்டு நீங்காது
காலமெல்லாம்
மழலையாய்
உன் கரம் சேராது
வீழ்ந்திடுவேனோ!

நிறைய விட்டுக் கொடுத்து
பழகிய எனக்கு
இனி விட்டுக்கொடுக்கவே
இயலாது எனும்
சூழலில்
சுற்றி வருகிறேன்
நானும் உன்னையே!

கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# கவித் தேடல்

நித்தம் நித்தம் கவி தேடி
புத்தம் புது கவிதையுடன்
அறியப்பெரிய தகவல் அறிந்து
பூத்துக் குலுங்குதய்யா இவள் மனம்
கலைக்கு அரசியாய் கவிக்கு பேரரசியாய்
மாற்றம் கண்டதையா இவள் எண்ணம்
தேடி தேடி பலன் கண்டேன்
அதனால் பல சுகம் கண்டேன்
வாடி விடாது தேடலை தொடர்ந்தேன்
தேடலில் உள்ள சிறப்பையும் கண்டேன்
கவி எழுதும் வகை கண்டேன்
அழகிய கவி முறை கண்டேன்
வர்ணனை அழகை கவியில் கண்டேன்
கவி தேடலில் இன்பமும் கண்டேன்
தேடல் என்பது சிறந்த வழி
வாழ்வில் கடக்க வேண்டிய வழி
இறை சொன்ன தேன் மொழி
கவி தேடலால் திறந்து கொண்டது என் மனதின் விழி




கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# பெண் என்னும் பெருந்தீ



பிறப்பினிலே தொடக்கம்
பெண் என்ற
பேராழியில்
யாவும் அடக்கம்.

ஈன்று புறந்தருதல்
மட்டுமன்று
எரிதழல் ஏந்தி
யாவும் வென்று
வழிநடத்திடுத்திடுவாள்

மனையுறை
மகளிரல்ல இன்று
வினைக்குயிர் ஆடவர்க்கு இணையாக
கனைகளையும்
தொடுத்திடுவாள்.

தனியெழில் கொண்டு
தடைகளைத் தகர்த்து
மடை திறந்த வெள்ளமாக
மாண்புடனே வாகை
சூடிடுவாள்.

போராடிப் பெற்ற
உரிமைகளெல்லாம்
புதுப்பொலிவுடன்
வலம் வந்தாலும்
எங்கோ ஓர் மூலையில்
இன்னமும்
பெண்கல்வி
அறியாமல்.

பெருமழை வெயிலிலும்
அரும்பாடுபட்டுக்
கொண்டிருக்கும்
அணங்கும்,

இந்நாளைக் கொண்டாடும்
நாள் வருமோ?
அந்நாளில் தான்
பாரதி கண்ட
கனவு பலிக்கும்
பாவேந்தரின் சிந்தனைகள் உயிர்க்கும்.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# காத்திருப்பு

தோல்வி வெற்றியாகும் வரையிலும்
ஆசைகள் நிறைவேறும் வரையிலும்
கனவுகள் நிஜமாகும் வரையிலும்
துன்பம் இன்பமாகும் வரையிலும்
காதல் கரம் பிடிக்கும் வரையிலும்
நேசிப்பது கிடைக்கும் வரையிலும்
கவலை மகிழ்ச்சியாகும் வரையிலும்
இலட்சியத்தை அடையும் வரையிலும்
காத்திருப்பு ஒரு சுகமே
இவ்வாழ்வில்



கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# கடவுள் வாழ்த்து

## அதிகாரம் 1

அனைத்தும் அவனே
அகர வரிசை பயன்பாடு
அகரம் எழுத்துக் கெல்லாம் முதன்மையே
ஆதி கடவுள் அகிலத்தில் இருக்கும்
அனைத்து ஜீவராசிகளுக்கும் முதன்மையே
இன்னல்கள் நீங்க இறைவனை நாடு
ஈடு இணையற்ற மகிழ்ச்சி பெறுவாய்
உலகமே அவன் அசைவில்
ஊண் உயிர் அனைத்தும் அவனே
எங்கும் நிறைந்திருக்கும் எம்பெருமானை
ஏறெடுத்து நீ பார்த்தால் போதுமே
ஐம்புலன்களையும் அடக்கி
ஒழுக்கமாய் ஒப்பற்ற இறைவனின்
திருபாதம் சரணடைந்தாலே
ஓங்கும் உனது ஆயுளும் புகழும்
ஔடதமாய் என்றும் விளங்குவாய்
அஃதே அவனின் அருள்
அறத்தின் வழியே வாழ்ந்து
மூத்தோரின் சொல் கேட்டு
பிறவி பெருங்கடலைக் கடக்க எம்பெருமானின்
திருவடி யைத் தொழுவோம்
இவை அனைத்தும் இல்லையேல்
கற்றதிலும் பயனில்லை
மனக்கவலை சூழும்
இரு வினைகளும் உன் வினையாகும்
பிறவி துன்பம் என்றும் போகா
எத்துன்பமும் நம்மைச் சேராதிருக்க
இறைவனின் திருவடி யைத் தொழுவோம்




கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# கோடுகள்

கோடுகள்
சாலைகளில் வரையப்படட்டுள்ளன
வாகன ஓட்டிகளுக்கும் பாதசாரிகளுக்கும்
வழிநடத்தும் வகையில்
விளையாட்டுக் களங்களில்
எல்லைகளாக குறிக்கப்படுகின்றன
கோடுகள் தொடர்கின்றன
வாழ்க்கையோடு வழிகாட்டியாக



கவிஞர் பெ.தனலட்சுமி ஈரோடு மாவட்டம்

# முரண்பாடுகள்

தினந்தோறும்
கோழிகளுக்கு
இரை போடப்படுகிறது
பிரியாணி கடைகளில்



ஓடாக் கால்கள்
கையேந்த,
ஓடும் கால்கள்
உண்டியல் நிரப்புகிறது.

சகுனம் பார்த்து
தொழில் துவங்குகிறான்.
சவப்பெட்டி
செய்பவன்.

'வாஸ்து பார்க்கப்படும்'
விளம்பரப் பலகையுடன்
நடைபாதை ஜோசியர்.

மாதாந்திர வலியுடன்
மாலை கட்டுகிறாள்
விற்பனைத் தாண்டி
கற்சிலைக்கோ? கடவுளுக்கோ?

மர நிழலில்
அமர்ந்த மாணவன்
தொடுதிரையில்
தேடுகிறான்
மரத்தின் பயன்கள்.

ஆடம்பர சுற்றுலாவில்
அதிசயத்தை காட்டிய
அப்பாவிடம்
ஆரஞ்சு மிட்டாய்க்கு
அழுகிறது குழந்தை.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# வாழ்வு என்பது வாழ்வதற்கு

வாழ்வு என்பது வாழ்வதற்கே நீ
வாழ வேண்டும் நல் முறையிலே
தாழ்வும் உயர்வும் அதில் வந்திடும்
புகழும் பதவியும் கிடைத்திடும்

எல்லோரும் உடன் ஒன்றென எண்ணிடு
எவரையும் கண்டு பொறாமை படாதே
உள்ளதை வைத்து வாழ அதுவே இன்பம்
உன் உள்ளம் பெற்றிடும் நிச்சயம் இன்பம்

அன்னதானம் என்றும் பெரிதும் சிறிதும் நீ செய்திடு
உன் எண்ணம் அங்கு மகிழும் பாரு
உறவுகள் என்பது தொடர்கதை
பரந்த நட்பு என்பது நம் வரவே



எதையும் பெரிது செய்யாதே அது
ஏற்றமா இருந்தாலும் காணாதே
சக்கரம் போல் தான் வாழ்க்கை
அக்கறை கொண்டு கடந்தால் மிகை

இதைதான்சொன்னார் முன்னோர்கள்
இக்கரைக்கு அக்கரை பச்சை என
இருக்கும் வரை நட்புடன் பழகுவோம்
வீட்டில் வாழாது நாம் வெளிச்சமே தினமும் காண்போம்

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# நிலையாமை

(அதிகாரம்: 34)




பொருளோ பணமோ
மற்றெதுவுமோ இவ்வுலகில்.
நிலையில்லை என்றறிந்தும்
மயங்குவோர் இழிகுணத்தோர்.

பெருஞ்செல்வக் கூடலென்பது
கூத்துகாணவரும் கூட்டம்.
முடிவில் கலைந்தோடுமாப்போல்
பலவழியில் கரைந்தோடும்.

நிலையற்ற இயல்பினுடைய
செல்வத்தை சேர்ப்பவன்.
நிலைப்பதன் அறத்தினையும்
அப்பொழுதே செய்தல்வேண்டும்.

வாழ்வை ஆராயும்போது
உண்மை ஏதென்றால்.
நாளென்பது அறுத்துக்கொல்லும்
வாளென்று தெளிவாகும்.

நாவடக்கி விக்கலெழுமாப்போல்
இறப்பு நெருங்குமுன்.
நல்லறங்கள் விரைந்துசெய்து
நிலைவாழ்வு பெறல்நலமே.

நேற்றிருந்தோன் இன்றில்லை
இன்றிருப்போன் நாளையில்லை.
என்றளவிலிருக்கும் இவ்வுலகில்
நிலையாமையொன்றே நிலையாகும்.

வாழ்க்கையின் தன்மையை
ஒருபொழுதும் ஆராயாது.
வீணாகும் கோடிசெல்வங்களில்
நிறைந்திடுவோர் அறிவீலிகளே.

உடம்பொடு உயிரின்தொடர்பு
பறவையின் முட்டையோட்டிலிருந்து.
பிரிந்தோடும் பறவைபோன்றே
தனித்தோடிப் போகும்.

இறப்பென்பது ஒருவனுக்கு
உறக்கம் வருதல்போலும்.
பிறப்பென்பது உறக்கம்நீங்கி
விழித்துக்கொளல் போன்றதுமாகும்.

நோய்க்கிடமான உடம்பினுள்
நுழைந்து நிலைத்திருக்க.
வாய்ப்பானதோர் இடம்
அமையவில்லைபோலும் உயிருக்கு.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# அத்தை மகள்

வானுயர வளர்ந்த கொடிகள்
    வண்ண மலர் பூக்கள் குலுங்க
கண் கொள்ளா காட்சியாக
    கண்டு அதனை  ரசிக்க
பருவ மங்கை ஒருத்தி
    பாதம் படாமல் நடந்து வர
பூத்து குலுங்கும் பூக்கள் நடுவே
    புகுந்து வரும் வேளையிலே
என்னை கண்ட பருவ மங்கை
    எடுத்தாள் ஓட்டம் கொடிகளிடையே
கொடிகளைக் கண்ட நான், அவளின்,
    கொடியிடையைக் கண்டேன்
பூக்களைக் கண்ட  நான், அவளின்
    பூ முகத்தைக் கண்டேன்.
பார்த்ததும் பதிந்தது மனதில்
    படபடவென்று அடித்தது நெஞ்சில்
துடித்தது மனது மட்டும்,
    துரத்திப் பிடிக்க வேண்டுமென்று
மனதை மாற்றிக்கொண்டு,
    மறுபடி திரும்பி விட்டேன்.
வீடு வந்து சேர்ந்து விட்டு,
    விட்டத்தை பார்த்து கொண்டு,
கண்ணை மூடி கனவு கண்டேன்,
    கள்ளி, அவள் கண்முன் நின்றாள்.
கண்ணை கசக்கி திரும்பி பார்த்தேன்,
    களுக்கென்று சிரித்து அறையினில் மறைந்தாள்.
அன்னையை அழைத்து,  யாரவள் என்றேன்,
    அத்தை மகள் என்று அதிரச்செய்தார்.
பருத்தி செடியோ பஞ்சாய் காய்க்கும்,
    புடவையாய் காய்த்ததில் பூரிப்படைந்தேன்.



கவிஞர் செல்வ.வெற்றிவேல் செழியன்,கருவாழக்கரை

# பூக்களும் மயங்குதடி உன்னாலே

சிறுவாணித் தண்ணியில
மயிலாக நீராடி

கார்மேகம் வானில்
அசைந்து நகர்வதுபோல்

அவள் கருங்கூந்தல்
காற்றில் தவழ்ந்தாட

இதழ்விரித்த புன்னகையில்
அன்னநடை மெல்லநடந்து

இமைகளுக்கு மேல்வைத்த
மயிலிறகு விழிகளால்

சோலைவனச் செடியில்
பூத்ததையும் கண்டு

சிறுவிரல்களால் மலரெல்லாம்
கொய்தெடுத்த நேரத்தில்

வலிமறந்து சிரித்த
மலர்கள் அத்தனையும்

தாவணித் திரைபோடத்
தவறியவள் மெல்லிடைகண்டு

வாசம்வீசும் பூக்களும்
மயங்குதடி உன்னாலே



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# காதல் சங்கமம்

கனவுகளிலே தவித்திருந்தேன்
கண்ணாளன் வரவிற்காக!

கானகத்திலே வீற்றிருந்தேன்
காதலனின் நினைவினிலே!

கிழக்கில் ஆதவன் உதிக்கும் முன்பே
கிட்ட இருந்து பார்த்திடணும்!

கீழடி கண்ட புதையலைப் போல
கீழ் வானமும் சிவந்ததையா!

குன்றின் மேலே தவமிருந்தேன்
குறுகுறு உந்தன் பார்வைக்காக!

கூடி வாழும் நேரத்திற்காக
கூட்டுக்குள்ளே குடியிருந்தேன்!

கெடாத பசும் பால் போல
கெடுதலின்றி பாசமதை கொடுத்திடுவேன்!

கேட்டு நீ பெறும் முன்பே
கேளாமலே கொடுத்திடுவேன் என் அன்புதனை!

கைக்கிளையாய் நானும் நின்றிடாது
கைகளால் சிறைப்பட காத்திருந்தேன்!

கொள்கைகள் ஒன்றும் இங்கில்லை
கொடுத்திடு நீயும் உனதன்பையே!

கோபதாபங்கள் என்றும் ஆகாதையா
கோசலையாய் வாழ்ந்திடுவேன் உன்னுடனே!

கௌசிகனாய் நீயும் வந்திடு
கௌரி சங்கமமாய் இருவரும் இணைந்திடுவோமே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# என் சிற்பம்



உன் கண்கள்
அடடா
என்னடா வசியம் வைத்துவிட்டாய்
இப்படி சுண்டி இழுக்குது
அடாவடியாக என் நெஞ்சில் புகுந்து
விடாகொண்டனாய் நகர மறுப்பது ஏன்டா.
படைக்கும் போது இறைவனின் கற்பனையில்
இயற்கை மொத்தமும் கண்முன் தோன்றியதோ என்னவோ
உன் கண்களை மட்டும் என்னை போதை ஏற்றவே
செதுக்கி வைத்துள்ளான்
தீச் சுடராய் சில நேரம்
வெண் பனியாய் பல நேரம்
என்னை மட்டும் வியக்க வைக்கும்
மாயம் சொல்லிவிட்டுப் போவடா
சிற்பமே வியந்து போகும்
என் சித்திரக் கண்ணாளா

கவிஞர் நிலமதி ராஜி,இலங்கை கல்முனை

# தலைமுறை அழிப்பு

மண் அடங்க, மழை இல்லை.
வெற்றிடமற்று,இறுகிப் போயிருக்கும்
இந்தப் புவியின் வெளிகளில்
எங்கும் தூசுகள்!

ஓசோனைக் காப்பாற்ற புகையில்லா
வாகனமென்றார்கள்,நஞ்சாகாத பஞ்ச
பூதங்கள், நம்புங்கள்! இன்றும்
பாதிப்பில்லாமல் காக்கப் பட்டிருக்கின்றன!



உள்ளிழுத்து வெளியேற்றப்படும் பீடிப் புகையின்
உயரம் மேகத்தை நோக்கி, ராக்கெட்டாய்
விரைகிறது. வெறுமையும், அகலா வறுமையும்
புகையாய்க் கரைகிறது !

கழுத்தில் அணிவிக்கப்பட்ட பொன்னாடையால்
மானத்தை மறைக்க வேண்டிய நிலை!
அரசியல் கள்ளுக் கடையில்,சாலை
எங்கும் தள்ளாடித் திரிகிறது!

எல்லாம் விற்பனைக்கு வந்து விட்டது
விற்பனை சிறக்க விளம்பரம் நடக்கிறது,
விற்பனை என்று வந்து விட்டால்
லாபம் தானே முக்கியம் கல்வியானாலென்ன
அது மருத்துவமானாலென்ன?

வல்லரசை நெருங்கிவிட்டோம், என வருடா வருடம்
வானதிர முழங்குகிறார்கள். தவறாமல் துணியைச்
சுவராய்க் கொண்ட வீட்டிலிருந்தொருவன்
வியந்தபடி பார்க்கிறான் !

பூமித் தாயென்கிறார்கள், தேசத்தைத் தாய்
என்கிறார்கள், நாடெங்கும் பாரதத்தின்
தாய்களும், பிள்ளைகளும் கற்பைத் தேடி
அலைகிறார்கள், சிலர் தொலைந்ததும் தெரியாமல்!

சனநாயகம் தழைத்து நிற்கிற தென்கிறார்கள்!
ரத்தச் சேற்றில் மிதக்கும் பிணங்களும்,
பதுங்கும் பணமும், அழிபடும் தளிர்களும்!
அமைதியைத் தேடுகிறது உலகம்!

ஓட்டுக்குக் கிடைத்த பணத்தில், ஒய்யாரமாய்
மயங்கிக் கிடக்கிற வர்களே!
உங்களுக்கடுத்த தலைமுறையை உங்களை
விடக் கொடூரமாய் யாரும் அழிக்க முடியாது!

**கவிஞர் ஹிதாயத்**

# சிறகை விரி

காற்றோடு போட்டியிட்டு
பறந்த பருந்தை
லேசாக தீண்டி
வென்றுவிட்டது
மரத்தை பிரிதலில்
வெற்றிகண்ட இலையொன்று.



வானைப்பார்த்து
அளவை கண்டோரின்
கண்களின் மயிர்கால்களில்
பீனிக்ஸ் பறவையின்
இறகு துளிர்க்க தொடர்கிறது.



விரிந்து பறந்த கிளியொன்று
நாளை கணக்கிட்டு கொண்டிருக்கிறது
விரிந்து பறந்த பருந்தொன்று
பூமியை நிழலடைத்து பறக்கின்றது.
விரிந்து பறந்த பெட்டைக் கோழியொன்று
அடைவைத்த வலியுடன்
குடும்பமாக பயணிக்கிறது.

விரிக்க தெரிந்த இறகுகள்
எல்லாம் இடைவெளிகளிட்டு
நுழைகின்ற காற்றின்
தொடுவுணர்வுதனை
புதுபுது தீண்டலில்
உயரப்பறக்க தயாராகின்றன
சிறகை விரிக்க முயலும்
மனிதர்களை போல்.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# தமிழ் மொழி

**பா வகை: குறள் வெண்பா**

**க. ழ’கரம்**

**அச்சமும் நாணல் இடுமாம் தமிழின்
ழகரத்தை உச்சரித் தால்**

**உ. இன்றைய கல்வி**

**கல்லாதோர் பேச்சில் இருக்கும் தமிழ்மொழி
கற்றவர் பேச்சிலேயில் லை**

**ங. தமிழே முன்னுரிமை**

**மோனை எதுகை அழகிற்குக் கூட
பிறமொழியை சேர்க்கமாட் டேன்**




**கவிஞர் சிபி அகழியன்,ஏதாநெமிலி (செஞ்சி வட்டம்)**

# நீங்களும் மாற வேண்டும்

துச்சமாக எண்ணி தூக்கி எறிந்தாலுமே
துவண்டு எழுந்து வீழ்த்தியவனை மதி
துயரத்தை உன்னுள் நீ வை
துன்பம் தந்தவனுக்கும் நல்லதை நினை
பணத்திமிரை அடக்கி மூலையில் வை
பலர் உன்னை வந்து குவிந்திடுவர்
பலர் உன்னை மதித்து நடந்திடுவர்
பணிந்து நடக்கும் கூட்டம் உன்னை
அடுத்தவர் குறையை பேசாது விட்டிடு
அன்பு கொண்ட சுற்றம் பெருகியே
அருவியாக ஆனந்தம் கொட்டும் நாளுமே
அதுவே உனக்கு ஆரோக்கியம் எப்போதுமே
அநீதி இழைப்பதை தூக்கி எறிந்தாலே
அநியாயம் தலை அறுந்து நிற்குமே
அடுத்தவர் பிரார்த்திப்பர் உனக்கு எப்போதுமே
அதுவே ஏழுபரம்பரையும் காக்கும் கேடயமாகவே
ஏளனம்  செய்வதை விட்டுவிட்டாலே
ஏழ்மையிலும் கை கொடுப்பார் மக்களே
ஏளனமாக வாழ்க்கை மாறாது என்றுமே
ஏச்சுப்பேச்சுக்கு ஆளாகமாட்டாய் என்றுமே
கஞ்சத்தனம் அகற்றி உதவி செய்தாலே
கடல் போல் செல்வம் குவிந்திடுமே
கண் மூடி வாழ்வை ரசிக்கலாமே
கடைசி வரை இறைவன் துணை உனைசேருமே



கவிஞர் ஜஸாரா ஜலீல்

# சிற்பி

பேசாது என தெரிந்தும்
அதோடு பேசிக்கொண்டே
சிலையை செதுக்கினான்
சிற்பி

செதுக்கி முடித்தான்
சிலையை நிறுத்தினான்.

சிற்பம் பார்த்தவர்கள் எல்லாரும்
சிற்பத்திடம் பேசினார்கள்
உன்னை செதுக்கிய சிற்பி யாரென்று!



கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்

# மறுமணம்

மறுமணம் என்ற வார்த்தையில்,
மங்கை அவளும் மருகி நிற்க !
மறைந்த மணக்கோலம்,
மாயதிரையில் காட்சியானதோ !
மங்கலம் நாணும் மந்திரமும்,
மறைந்தே போனதோ !
மறுவாழ்வு என்பது மருந்தாகுமோ !
மருகிய மனதும் அதை ஏற்குமோ !
மணமாலைகள் மறுபடியும்
மணம் வீசுமோ! என்ற,
மனக் குழப்பத்தில் மணமேடை செல்ல!
மனமோ தவிப்பில் நிறைந்து இருக்க!
மன்னவன் அவன் கை அழுத்தத்தில்,
மறுபடியும் மலருமோ அவள் மனமும் !
மலரும் காலை பொழுதில்,
மன்னவன் மார்பில் அவள் இருக்க!
மனம் கொண்டவனாக மாறினானோ,
மனதை வென்றவனாய் !
மாற்றம் அதுவும் வந்தததோ !
மாற்றிய மணமாலைகள் மழையாக,
மண் வாசம் வீசியது மனம் அதுவும்,
மாற்றம் கொண்டதால்!
மண் அடியில் சேரும் வரை!



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# வாழ்க்கை பயணம்

துரத்தும் வரை தெரியா தூரமதுவும்
துணிந்து வந்த பின் கை கோர்க்கும் பயணமதுவுமே
பனிக்கூழாய் கரைந்து கடக்கும் காலமதுவுமே

கலந்த பிறகு நீண்டு போகும் ஊடலுடன் கூடலாக.
இரு காலால் நடக்கும் மனிதரும்
மண்ணில் புதையும்போது நான்கு பேரால்
எட்டு காலால் படுத்து செல்லும் பிணபயணமே



நடக்கின்ற போது பறந்துவிட்டு படுக்கும் காலத்தில்
நடைபயிற்சி செய்யும் நல்பாக்கியவான்களே!

நொடிநேர பணி தூரத்துக்கு
வாகனம் தேடும் வல்லரசுகள்
வலிமையை வீணாக்கி விட்டு
நாள்கணக்கில் மனையிலும் நிலையத்திலும்
முயற்சி செய்து பயிற்சி செய்யும் பலவான்களே!

கடல் பயணமும் தெரியும் கரைவரை
வான் பயணமும் வானூர்தி இறங்கும் தரைவரை
பேருந்து பயணமோ நிறுத்தம் வரை
நடைபயணமும் கால்கள் ஓயும்வரை
மனித பயணமும் பேச்சும் மூச்சும் நிற்கும் வரை

கைவீசி நடந்து கால்வீசி பயணித்து கைகூப்பி வேண்டி!
பக்தர்கள் பரப்பிரம்மம் தேடி புண்ணியம் சேர்க்கவே!
வேட்பாளர்கள் வாக்களர்கள் தேடி பாவம் சேர்க்க
நிஜ பயணத்தில் நிழலொன்றே நிஜமான துணை

பாதை பழகும் பசுந்தளிரும் பல தடைகள்
பல்சுவை வாழ்வதிலே நடை பயணமும்
பயணம் முடியும்போது வாழ்க்கையதும் முடிந்திடுமே!

கவிஞர் நீலா சுபாஷ்

# கவிதை

**சருகுகள்:**

காய்ந்து விட்டது என தாயே உதிர்த்து விட்டாலும்,
காற்றோடு ஓடி விடாமல்,
மண்ணோடு போராடி,
பலர் காலடிகளில் மீண்டும் மீண்டும் செத்து ,
தாயிக்கே உரமாகும் - இந்த சத்தில்லா சரித்திரங்கள்.



**தனித்துவம்:**

வெப்பத்தால்
சகதி இறுகும்,
மெழுகு உருகும்,
ஆனால்
வெப்பம் பொதுவானது.
இறுகுவதும் உருகுவதும்
அவரவர்களின் தனித்தன்மையை பொறுத்தது

**கலி :**

இருபது வயதிற்குள்
ஐந்து காதல்,
நான்கு காதல் தோல்வி என்றால் கழிந்து விடும்
உன் காலங்கள் கனவிலேயே !
கலாம் காண சொன்ன கனவு இதுவல்ல.

கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு,சங்கரன்கோவில்

# பேனா முனை

வேண்டாம் என்று
ஒதுக்கித் தள்ளித்
தூக்கி எறிந்து
தூரப் போட்டாலும்
மீண்டும், மீண்டும்
நெருங்கி வந்து
நற்சிந்தையை நெரித்துக்
கொன்று போடத்
தொடர்ந்து வந்திடும்
துன்பச் சிக்கல்களை
விடுத்து எல்லைகள்
ஏதுமற்ற கற்பனை
வானில் வண்ணச்
சிறகினை விரித்துத்
தடைகளற்ற பறத்தல்
போலே!
பொய்த்துப் போன
கனவுகளுக்குள்ளும்
கனத்துப் போன
இதயத்துக்கு உள்ளிருந்தும்
கதை சொல்லிடுவாள்
இவள்!



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# பள்ளிப்படிப்பு

அக்கால அரசு பள்ளியில்
படித்த ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும், நாலடியாரும்
நினைவு அகலாமல் பசுமரத்தாணி போல் மனப்பாடமாக இன்றும் நினைவில்,
பாட்டும், தையற்கலையும் இன்றும் நினைவில்,
உயர்கல்வி பெற, இடம் மாற, சக மாணவிகள் இன்றும் நினைவில்,
வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் மாலையில்
நடக்கும் பிரார்த்தனை வகுப்பு இன்றும் நினைவில்,
பகவத்கீதை, குரான், பைபிளின் வாசகங்கள்
குத்து விளக்கேற்றி பஜனை இன்றும் நினைவில்,
கம்மர் கட்டை, காக்கா கடி கடித்து, மாங்காய் கடித்து
தோழிகளுக்கு கொடுத்து சாப்பிட்ட நாள் இன்றும் நினைவில்,
உயர்கல்வியில் சீருடையாக பாவாடையும், தாவணியும் இன்றும் நினைவில்
முதன் முதலாக பட்டிமன்றத்தில், கற்பில் சிறந்தவள் கண்ணகியா,
மாதவியா என்ற தலைப்பில் தொடை நடுங்க,
மாதவிதான் என்று பேசியது இன்றும் நினைவில்,
பாட்டுப் போட்டியில் ஜன கண மனப்பாடி
எல்லோரையும் நிற்க வைத்தது இன்றும் நினைவில்,
நேற்று பார்த்த சினிமாவை மதிய வேளையில்
கூட்டமாக அரட்டை அடித்தது இன்றும் நினைவில்,
பள்ளி இறுதி நாளில், ஒருவருக்கொருவர் நீல மை
வீசி விளையாடியதும், பிரியா விடை பெற்றும் இன்றும் நினைவில்
வீட்டிற்கு அழைத்து, தேநீர் விருந்து அளித்து
புகைப்படம் எடுக்க, சேலையை கட்டத் தெரியாமல் எப்படியோ
கட்டி அலங்காரத்தில், அனைவரும் தேவதைகளாக
இன்றும் நினைவில், என்றும் நினைவில்
மலரும் நினைவுகளாக.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ, ஊத்தங்கரை

# மயக்கம் ஏனோ?

## அறுசீர் ஆசிரியவிருத்தம்

சண்பகம் நறுவீ வண்ணம்
தையலின் பொலிவு யாக்கை
கிண்கிணி யணிந்த மானாய்க்
கிடக்கைய ளக்கும் கால்கள்
நுண்ணிடைக் கொடியின் கொவ்வை
நோக்கிட மனத்தில் தேறல்
எண்ணியென் ஏக்கம் கூடி
என்னுயிர் அவளாய் இங்கே!

தையல் - பெண் ; பொலிவு - அழகு ;
யாக்கை - உடல் ; கிண்கிணி - சலங்கை ;
கிடக்கை - பூமி;கொவ்வை -கோவைக்கனி;
தேறல் - மது ;



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# மருளும் கயலும்



தொலைத்த கயலைத் தேடினேன்
மருளும் மான்களாய் மாறினேன்
அவள் கலைந்த கோலத்தை
இதய கோவிலாய் மாற்றிட.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# விலோசனம்

கருவறையை கண்மூடியணைத்து வியக்கும் விழிகளுக்கு
காரிகையின் ( பெண் ) அலறலும் தசைக்கிழியலும் காணவில்லையோ
கவர்ச்சியையும் காமத்தையும் ரசிக்கும் மிண்டைகளுக்கு ( கண் )
காந்தையின் (பெண்) வலிகளையும் உணர்வுகளையும் உணரமுடியவில்லையோ

கல்வியை திணிக்கும் பெற்றோரின் மிழிகளுக்கு (கண் )
கற்றலறியா சாதனையாளர்களைப்பற்றி போதிக்க அறியவில்லையோ
போதை தாகத்தில் அலையும் குடிமகன்களுக்கு
பேதையின் வாழ்க்கை தாகத்தை தீர்க்கும்
பாதை பார்வை குறையால் காணமுடியவில்லையோ



தற்கொலையை நாடும் பிள்ளைகளின் கண்களுக்கு
தாய்தந்தையின் தியாகம் தென்படவில்லையோ
ஊழலை ஊக்குவிக்கும் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும்
உரிமைகளை யாசிக்கவும் சட்டங்களை அறியவும்
ஊனவரே ( மனிதன் ) உம்விழிகளை திறக்க வீரமில்லையோ

பொய்யர்களே மெய்யுணர்த்தும் புராணங்களின் போதனைகள்
பார்த்து படித்து பகுத்தறிவடைய ஆர்வமில்லையோ
திருடி பசியாரும் கள்வனின் பார்வைக்கு
தீராது உழைக்கும் உழைப்பாளியின் வியர்வை
தினமும் உழைக்கும் எண்ணத்தை உருவாக்கவில்லையோ



காதல் மோகத்தில் அலையும் மாணவர்களுக்கு
கல்வியால் வருங்காலத்தில் அடையும் மாற்றங்களை
கண் கொண்டு அனுபவிக்க பொறுமையில்லையோ
ஏமாற்றும் அரசாங்க அதிகாரிகளின் காட்சிக்கு
என்றும் பணம் வெறும் காகிதம்
என்பதை மனதிலேற்றும் மாற்றங்களை விரும்பவில்லையோ

விளையாட்டை வியாபாரம் பார்க்கும் வீரர்களுக்கு
வெறியர்களின் ஏக்கத்தை பூர்த்திசெய்ய மனமில்லையோ
இறைவனின் திருவருளில் ஆரம்பிக்கும் இவ்வாழ்க்கை
ஆண்டோர் ( மனிதன் ) அரியின் ( கண் ) இருளில் முடிவடைகின்றன
ஆகவே நல்லவற்றைக்காண் நல்லொழுக்கத்துடன் வாழ்.

கவிஞர் ரிஷி,வேலூர்

# சங்க இலக்கியமும் தமிழரும்

சங்ககாலப் பாடலிலே
யாமறிந்தக் குறிப்புகள்
பெண் புலவர்களின்
பெருமைமிகு பாடல்வழியே
பெண்சுதந்திரமும் அதை
அவர் பேணியவிதமும்
அறைகூவி சொல்லிட
சிலம்பின் காதை
சிருங்காரமாய் சொல்லியது
சிந்தித்து நீதிவழங்கிட
புறநானூறு உரைத்ததோ
வீரத்தின் செழுமையை
அகநானுறிலுரைத்ததோ
அன்பான இல்லறத்தினை
நளவெண்பாவிலோ
சமையல் ஆணுக்கும்
சரிநிகர் சமானமென
ஒன்றரை அடிக்குறளிலோ
ஓராயிரம் தத்துவங்கள்
தமிழரின் வாழ்வியல்
தரணியெங்கும் பரப்பிட
சங்கப்பாடலில் சங்கமித்ததே.






கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# மனைவிக்கு கடைசி கடிதம்

வேலைப் பார்த்து அலுத்துப் போச்சி
வயசும் ரொம்ப ஏறிப் போச்சி
நம்ம பிள்ளைங்க பேசுறப் பேச்சி
கேட்டும் கேக்காம இழுக்குது மூச்சி

அறுபது வருசம் வாழ்ந்த வாழ்க்கை
அறுபட போகுது நம்மோட சேர்க்கை
சாகப்போறேன்னு தெரிஞ்சிடிச்சி
வாழ்க்கை அவ்வளவு தான் முடிஞ்சிடுச்சி

சத்தியத்துல இருந்து தவற போறேன் - உன்ன
தனியா விட்டுட்டு கௌம்ப போறேன்
அங்கேயும் தேடி வந்துடாத - உங்கூட
பசங்க இருப்பாங்க பயப்படாத.




கவிஞர் இ.மணிகண்டன்,குமாரபாளையம்

# நன்னயம்

வாழ்க்கை என்றும் நலமாய் அமைய
சொல்லும் செயலும் சரிவரப் பேணி
உடலும் உள்ளமும் பொறுமையில் நனைந்து
மற்றோர் கருத்துக்கும் மரியாதை கொடுத்து
உயிரெனப் போற்றும் மானம் காத்து
மாண்புடன் உலகில் வாழ்ந்திடல் வேண்டும்

பிரச்சனைகள் தோன்றி பிளவுகளும் தரும்
நிதானம் தவறின் நிம்மதியும் தொலையும்
மானம் காக்கும் மனத்திடம் கொண்டு
மண்ணில் பொறுமை மிகைத்திடல் வேண்டும்
நாளைய பொழுதை நலமாகக் கழித்திட
நன்னயம் செய்து நல்வழி நடப்பீர்



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை(இலங்கை)

# கண்ணப்ப நாயனார்

ந. ( பாகம் மூன்று )

என்னமோ நடக்கப் போகிறது ? சிவாச்சாரியார் மலைக்கு வந்தார்
ஒன்னுமே புரியாமல் சிவனை வணங்கி மரத்தில் ஒளிந்து கொண்டார்
தன்னுடைய பூஜையில் ஏதாவது தவறு இருக்குமோ? மனம் நொந்தார்
சொன்னபடி வேட்டைக்காரன் வருவதை மறைந்திருந்து பார்த்தார் .

வழக்கம்போல் ஆறாவது நாள் திண்ணன் வந்து கொண்டிருந்தான்
பழக்கமான பாதையில் இரத்தச் சுவடுகள் கண்டு அஞ்சினான்
கிழக்கில் உதித்த சூரிய ஒளியில் களங்கம் இருப்பதாக உணர்ந்தான்
ஒழுக்கமற்ற தீய சகுனங்களாக பறவைகள் கூச்சலிட்டு சூழ்ந்தன

மஞ்சன நீர் வாயில், பூக்கள் குடுமியில், கையில் மாமிசம், வந்தான்
நெஞ்சம் பதைபதைக்க,"என் நாதனுக்கு என்னே ஆனதோ", ஓடினான்
கொஞ்சமும் சரியில்லை வழியில் வந்துபோன சகுன நிமித்தங்கள்
"வஞ்சனமாக பழிச்சொல்லுக்கு ஆளாகப்போகிறேனோ? தெரியலையே?"

அருகில் வந்ததும் கண்டார் அந்த அலங்கோலமான அந்தக் காட்சி
மருட்டும் தோற்றம் அல்லவா? நாதனின் வலது கண்ணில் இரத்தம்
விருட்டென கையில் இருந்த இறைச்சியை தரையில் கடாசினான்
"தருமம் தவறிவிட்டேன், பழி எனக்கல்லவா? நாதனே இது தகுமா ?"



வடியும் குருதியை கை துடைக்க குருதிப்புனலாக குருதி கொட்டியது
செடிதழைகளை இட்டு அடைக்க அடைக்க இரத்தம் பீரிட்டு பாய்ந்தது
படிக்காமலே கேட்டதை நினைத்தான் "கண்ணுக்கு கண் ஊனுக்கு ஊன்"
கடிதாக அம்பினால் தன் வலது கண்ணைப் பெயர்த்து எடுத்தான்

எடுத்த கண்ணை நாதன் உதிரம் வரும் வலது கண்ணில் அப்பினான்
அடுத்த நொடி அந்த அதிசயம் நிகழ்ந்தது, வழியும் குருதி நின்றது
தடுத்துவிட்ட மகிழ்ச்சியில் காடு அதிர கத்தினான், சிரித்தான்
மிடுக்காக தோள்களைத் தட்டி ஆனந்த கூத்தாடினான் வேடுவன்

இரத்தம் கொட்டும் வலது கண்ணின் வலியை அவன் உணரவில்லை
வருத்தப்படாத வாலிபன் அவன் நாதனின் பசியை உணர்ந்தான்
"இரு , கொண்டுவந்த உணவு வீணாகிப்போனது இதோ வருகிறேன்."
திரும்பிப் பார்த்தவன் திகைத்தான் என்ன இது அடுத்த கண்ணிலுமா

இடது கண்ணிலும் குருதி வழிந்தது , ஆறாக ஓட நிலை குலைந்தான்
அட துள்ளளுடன், "நாதா இதற்கு மருந்து ஒன்று என்னிடம் உண்டு
சுடர்விடும் நாதனின் குருதிக் கண்ணுக்கு என் மறு கண் இருக்கிறதே"
சட சடவென மேகம் சூழ மழை வருமென இடி இடித்து ஓய்ந்தது

அம்பை எடுத்து அடுத்த கண்ணை தோண்டும்முன் நினைத்தான்
"நாதனின் குருதிக் கண்ணை அடையாளம் காண்பது எஞ்ஞனம்?"
தன்னுடைய இடது காலைத் தூக்கி குருதிக் கண்ணில் ஊன்றினான்
இன் முகத்துடன் கூரிய அம்பினால் இடது கண்ணை எடுக்கலானான்

தன் கையினால் இடது கண்ணை எடுக்கும் கையை தடுத்தார்
தேவர்கள் மலர் மழை பெய்தனர். வாத்தியங்கள் முழங்கின,
"கண்ணப்ப நிற்க!" என்றார் திருக்காளத்தி விடையொரு பாகன்
"கண்ணப்பனே என் வலது புறம் இருக்கக் கடவாய்" என்றார்

(முற்றும்)

கவிஞர் ந.திருக்காமு

# உன்னத காதல் [ஊனம்]

என்னவளே என் மனதில் நின்னவளே
கனிவான பார்வையில் கசிந்துருகி வந்தவளே

பார்த்த உடன் காதல் வரவில்லை
பழகிய பின் பிரிய மனமில்லை

நேற்றோடு வாழ்க்கை புதியதாக ஆனதே
சேற்றோடு கலந்திட்ட செந்தாமரை யானதே

திருமண ஏற்பாடு செய்திட்ட வேளையிலே
அதிவேக வாகனம் விபத்து சாலையிலே

கால்கள் ஊனம் கலங்கிய பெண்மனம்
கரத்தினை பற்றியது உன்னத காதல்



கவிஞர் ஜெ.சிவக்குமார்,விழுப்புரம் மாவட்டம்

# மனமே நாமா? நாமே மனமா?

ஏதோவொரு காரணம்
தேவைப்படும்
பரிதவிக்கும் மனதிற்கு

மனமே நாமா
நாமே மனமா
என தினம் குழப்பி
தானே பரிதவிக்கும்

மலர் கொத்து பறித்து
மஞ்சம் விரித்தும்.
தொலையாத கனவில்
தூக்கம் தழுவி தொலையும்

சிறுபிள்ளை
பென்சில் போன்று
தினம் தொலைந்து
தேர்வு பயம் கூட்டும்



காணாத பொழுது
தவித்தேன் என்பதும்
காத்திருக்கும் பொழுது
கண்டும் காணாது
நகரும் கண்களும்
விந்தை தானோ என.

வித்தையில் கண்கட்டி
விழித்திரை மறைத்து
கானல்தனில்
தானும் புள்ளியாகி
தொலையும்!

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# மனதின் ரீங்காரங்கள்

முள் மரத்தின் பூக்கள்
எல்லாம் முனுங்கிய
வண்ணமே

தரைப்பாயில் கவிழ்ந்தாலும்
தடையென முள்சிதறலின்
மூடாப்பில்

முடிவில்லாத தேடலுக்குள்
நுழைந்த மனம்
மறக்காத பல நினைவுளை
அள்ளி அலசியே அலசியே

உயிர்வலி சுமக்கிறது
உறங்கும் மடியில் தவழும்
பல நினைவுகள்
குத்தி கிழிக்கிறது குலைந்து போகுது

மறந்தோமென நடித்த மனதின் கூப்பாடு
வியப்பிற்குள் விடைதேடுது
அரும்பெரும் கிடங்கோ
அவஸ்தையின் இருப்பிடமோ

சில கணங்களில் பொசுக்கிய
சொற்களின் நாட்டியம்
மீண்டும் ஒரு கோபக்கரையில்
நிற்கவைத்து



சாட்டையென வார்த்தைகள்
கோர்க்குது
வார்த்தை வலையில் வதைப்படும்
மனதின் ரீங்காரம்
சில இரவின் இனிமையை
பறித்து தின்கிறது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# கம்பளிப்பூச்சிகள்

அதோ, அந்தப் பள்ளிக்குச் செல்லும்
சிறுவன் சிந்தனையில் எத்தனை வண்ணங்கள்!

அவன் வீடு திரும்புவதைக் காட்டிலும்
பள்ளிக்குச் செல்கையில்
எத்தனை ஆர்வமான
ஆரவாரப் படபடப்புகள்!



ஒரு பட்டாம்பூச்சியின்
வண்ணத்தோடும் அதன்
துள்ளிப் பறத்தலோடும் அவனைக்
கண்டு களிக்கையில்
முதுகுப் பைகள்
இறக்கைகளாய் மாறிவிட்டனவென்றும்
கல்விக் கொள்கைகள் சீராய்க்
கட்டமைக்கப்பட்டுவிட்டதென்றும்
ஆராயாது அனுமானித்துக்கொள்ளலாம்;



அதுபோகட்டும்!
கரோனாவின் அச்சுறுத்தல்
பிரசவித்த கல்வி வழியில்
பட்டாம்பூச்சிகள் மெம்மெதுவாய்
ஏராளமாய்த் தாராளமாய்ப்
பறந்து பறந்து பட்டம் விட்டு வானையும்
மட்டைப் பந்துகள் வீசி வீதிகளையும்
வண்மயமாக்கிக்கொண்டிருக்கையில்

பள்ளிக்கூடங்கள் திறக்கும் நாள்முதல்
பட்டாம்பூச்சிகளின் இறக்கைகளில்
கம்பளிப்பூச்சுகள் ஊர்ந்து
உருக்குலைக்கத் துவங்கும்;



அன்றுமுதல் அச்சிறுவர்கள்
பட்டாம்பூச்சி பிடித்து இரசிப்பதை
அவர்களாகவே நிறுத்திக்கொள்வார்கள்.

கவிஞர் தயானேஸ்வரன்,வில்லிவாக்கம்,சென்னை-49

# பிழை

நற்செயல் செய்ய நாட்கடத்தல் பிழை
நாணலாய் வளைந்து பணிதல் பிழை
நாற்புறமும் இகழ வாழ்தல் பிழை
நன்மக்கள் அறநெறிதனை கெடுத்தல் பிழை
நமக்கென சுயநலமாய் இருத்தல் பிழை
நம்முன் போலியாய் துதித்தல் பிழை
நாவிற்கு அடிமையாய் கிடத்தல் பிழை
நோயுடன் நாட்கள் நகர்தல் பிழை
நேசிப்பதாய் பழகி ஏமாற்றல் பிழை
நம்மை ஈன்றவரைக் கைவிடல் பிழை
நலிந்தவரை ஏளனமாய் பார்த்தல் பிழை
நாதியற்று போயினும் கையேந்தல் பிழை
நால்வயிறு காயக் காரணமாயிருத்தல் பிழை
நற்கல்விக்கு நன்கொடை கேட்டல் பிழை
நம்கடமையாற்ற கையூட்டு பெறுதல் பிழை
நானிலத்தில் நெகிழி கலத்தல் பிழை
நாடாளுபவர் வாக்குறுதி தவறல் பிழை
நித்தியனும் பிழையையெல்லாம் பொருத்தல் பீழை



( பின் குறிப்பு : பீழை - துன்பம் ; நித்தியன் - கடவுள் )

கவிஞர் பா.இராஜசேகர்,சிதம்பரம்

# அகமறியா அகம்

அந்தி கரைந்த அலையதிலே
பாதச்சுவடும் படிந்தனவோ
பாசறையாய் கரையிலே

சுவடில் படிந்த நுரையும்
தென்றலில் மறைய
கரைத்தொட்ட அலையிலே
அடித்து சென்ற பாதச்சுவடாக.

கணம் விலகாத கனவிலே
கரம் பதிக்கா வாழ்க்கை
வலி மறைத்தும் பயனில்லை
கண்ணீர் வடித்தும் பயனில்லை.

சுயம் விரும்பி பெற்ற காதலில்
அடிமையாய் இருந்தும் அறியா நிலை.
உணர்வாயோ?



உணர்ந்தால் அகம் அறிவாயே
ஒதுங்கிடாது.
நிலை தடுமாறி நின்றும்
தத்தளித்து மிதக்கிறேன்.

நீ உண்மை தானா?
நீ உணர்வுகள் தானா?
உன் வாக்கியம் நிதர்சனம்தான்.
என நித்தம் சிந்தனையிலே மூழ்கிட.

உன் நிலை உணர்ந்தும்
விலகியே நின்றிட
எண்ணும் நெஞ்சம்.

என் உணர்வை
உன்னிடத்தில் காட்டிட.

கவிஞர் கார்த்தி

# கார்முகிலே!

நீண்டு விரிந்து மலர்ந்த மலர் தோட்டத்தைப் போல்
உன்னுள் தான் எத்தனை அழகு!
அண்ணாந்து பார்க்க வைக்கும் அழகி இவள்!

ஒவ்வொரு முறையும்
இவளது ஒவ்வொரு பரிணாமத்திலும்
என்னை இரசிக்கச் செய்பவள்.



சில சமயங்களில்
இரண்டு திரண்டு கும்மிருட்டாக காட்சியளிக்கும்
இவளது வதனத்தில்
என்னை மெய்சிலிர்க்கச் செய்பவள்.

பல சமயங்களில் ஒளிந்து
விளையாட்டு காட்டும் சேட்டைக்காரி!

இத்தனை வர்ணனைக்கும் சொந்தக்காரி
இவள் கார்முகில்!

கவிஞர் அகல் தாமரை "கவி",கமுதி

# "தோல்தொழில் முன்னோடி" "பத்மஸ்ரீ" நாகப்பன்



புதுக்கோட்டை மாவட்ட மேலசிவ புரித்தோற்றத்தர்!
பச்சிளமை காலமதில் நற்றந்தை காலமானார்!
பதினைந்து வயதிலேயே இலங்கைக்கே சென்றங்கு
வங்கித்தொழில் வர்த்தகராம் நாராயணரின் கூட்டேற்றார்!
வயதிருபதில் சொந்தமாகத் தோல்தொழிலின் நல்லியற்கைச்
சாயத்தை ஏற்றும்வகை நுட்பத்தைக் கூட்டிட்டே
நேரம் பணம் மிச்சமாக்கி லாபத்தை ஈட்டினரே!
வாடிக்கை யாளர்கட்குக் குறித்தகாலம் தரும்பண்பால்
நம்பிக்கை மிக்கவராய் நல்வணிகர் ஆனாரே!
இரண்டாவது உலகப்போர் காலத்தே பிரிட்டிஷ்னது
ராணுவத்தின் வீரர்கட்கு ஷூக்களினைத் தயாரித்து
வழங்கினாரே! சென்னையிலே பழநியப்பா அண்டுகோவும்
இந்தியாபேர் சீர்லெதரின் கார்ப்பொரேஷன் தோற்றுவித்தே
நிறுவனங்கள் வழியாக ஜப்பான்போல் நாடுகட்கு
தோலினையே ஏற்றுமதி மிக்களவு செய்திட்டார்!
பலநாடுகள் தன்னிலுமே முகவர்கள் மூலமாக
அன்னியத்து செலாவணியை பெருக்கிட்டார்! சென்னையின்
மத்தியத்தோல் ஆராய்ச்சி நிருவனத்தின் வளாகத்தே
ஆய்வுமையம் அமைத்திட்டார்! முதன்முதலில் தோல்பொருட்கள்
கண்காட்சி அறிமுகத்தைச் செய்தவரும் இவர்தானே!
மாண் "பத்மஸ்ரீ" விருதளித்து நாடிவரைப் போற்றியதே!
"தோல்தொழிலின் முன்னோடி " இவராவார்! உமையாளே
நற்றுணையாம்! மணாளரினும் ஓர்வயதே குறைவவர்க்கு !
கேள்வர்தம் பேரிழப்பு இம்மாதின் அறுபத்து
ஆறுவயது காலத்தே! தனிநிலையில் வாழ்ந்திட்டார்
இருபத்து எட்டாண்டே! கொழுநர்தாம் வாழ்ந்ததுவோ
அறுபத்து ஏழாண்டே! ஆச்சியம்மை வாழ்ந்திட்டார்
தொண்ணூற்று நான்காண்டு! அன்னவரின் லட்சியத்தை
முன்னெடுக்கும் சந்ததியர் உள்ளனரோ? அன்னவரின்
ஆற்றலினைப் போற்றிடுவோம்! ஆக்கமெலாம் மேம்படுக!

**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# மாணவப் பருவத்தின் மாண்பைக் காத்திடுவீர்

கல்வியொடு ஒழுக்கத்தைக் கற்குமிடம் பள்ளிக்கூடம்!
வலைத்தளத்தில் பள்ளியொன்றில் நிகழ்ந்தவற்றைப் பார்த்திட்டேன்
காணொளியில்! கவலை கொண்டேன்! பகிர்கின்றேன்!
வகுப்பறையின் மின்விசிறி, மேசை நாற்காலிகளை
உருக்குலைந்து போகும்வகை உடைத்துச் சிதைக்கின்றார்!
மாணவர்களோடு, மாணவிகள் இணைகின்றார் இச்செயலில்!
மனநிலையில் மாற்றங்கள் இதற்கான காரணங்கள்!
தண்டிக்க வேண்டிய குற்றமாகும் இச்செயல்கள்!
நாளைய பாரதத்தின் தூண்களன்றோ மாணவர்கள்!
பருவத்திற்குப் பொருந்தாத போதைப் பழக்கங்கள்
பேருந்தில் வன்முறைகள், ஆசிரியரைத் தாக்கிடுதல்,
இருபாலரிடத்தும் இந்நாளில் பெருகிடுதல் மிகக்கொடுமை!
பெற்றோர்களுக்கும் பொறுப்புண்டு இத்தகைய வன்முறைக்கு!
சேதம் விளைத்ததற்கு இருமடங்காய் அபராதம்
விதித்த பின்னர் மதிப்பெண் பட்டியலை,
மாற்றுச் சான்றிதழை வழங்குதலே நன்றாகும்!
பெருந்தொற்றின் தாக்கத்தால் உணர்வுகளில் மாற்றங்கள்!
எண்ணிப் பார்க்கின்றேன் எந்தன் மாணவப்பருவத்தை!
அரசுப் பள்ளிகளில் அற்புதங்கள் நிகழ்த்திய
ஆசிரியர் சமுதாயம் வாய்த்தது வரமாகும்!
நன்நடத்தை, ஒழுக்கம்,நற்பண்பை வளர்த்திடவே
மாணவர்களின் மனநிலையை மாற்றிடுவர் ஆசிரியர்!
இந்நாளில் அந்நிலைமை ஏனில்லை பள்ளிகளில்?
தவறு செய்யும் மாணவரைத் தண்டித்தல் பெருங்குற்றம்!
தன்னை உணர்ந்து, பண்படுத்திக் கொள்வதற்கு
மாணவப் பருவமே மகத்தான பருவமன்றோ?
அன்ன மாவே மண்ணொடு கிளியே
என்னும் நன்னூல் பாடலும், வகைப்படுத்தும்
மாணவரை! மாண்பு சிதையாமல் நடத்தலே
மாணவர்க்கு அழகாகும்! உணர்தல் நலமாகும்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# தர்மம் தலை காக்கும்

மனிதம் வாழ்ந்திட
மனிதநேயம் தேவை
புனிதம் பூத்தால்
பூவுலகம் மலரும்

வறுமையின் சின்னங்கள்
வாழ்வின்றித் தெருவிலே
தருப்போல காத்திட
தயவுகள் இல்லையே

மனிதம் வேண்டும்
மாண்புகள் சிறக்க
பிணியாய் பசியும்
பிடுங்குதே சிறுசுகளை

தர்மம் தலை
காக்கும் எப்போதும்
அதுவே உயிர்
அனைத்தும் பேணும்

கொடுத்துச் சிறந்தால்
கொடைமனம் உனக்கு
கெடுத்து வாழ்வதற்கு
இரக்கத்தைக் பலப்படுத்து



கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# அவள் - இளமை - முதுமை

## அவள்

யாரும் ரசிக்கவிட்டாலும்
அழகை சொரியும்
நிலவு அவள்.



## இளமை

உடனே கடந்திடும்
அழகிய காட்சி
ஓயாமல் அசைபோடப்படும்
அற்புத மாட்சி

## முதுமை

நினைக்கவே இயலாத
நிதானம் தானாய் வருது இப்போது.
திரும்பாத காலங்கள்
திரும்ப திரும்ப நினைக்கப்படுது தப்பாது

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

(கட்டுரை)

(நவம்பர் 7, 1922- மார்ச் 16, 1989)

தாய்சொல்லித் தந்த மொழி
தாலாட்டில் கேட்ட மொழி
சந்திரனை அழைத்த மொழி
சாய்ந்தாடிக் கற்ற மொழி
பாட்டிகதை சொன்ன மொழி
பாடிஇன்பம் பெற்ற மொழி
கூடிஆட உதவும் மொழி
கூட்டுறவை வளர்க்கும் மொழி
மனந்திறந்து பேசும் மொழி
வாழ்க்கையிலே உதவும் மொழி



## பிறப்பு - படிப்பு

புதுக்கோட்டை மாவட்டம் இராயவரத்தில், அழகப்ப செட்டியார்- உமையாள் ஆச்சி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். ஐந்தாம் வயதில் தான் பிறந்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் வாழ்ந்த அழகப்பன் என்பவருக்குத் தத்துப்பிள்ளையாகச் சென்றார்.
இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பின்னர் இராமச்சந்திரபுரத்தில் உள்ள பூமீசுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

## எழுத்துப் பணி தொடக்கம்

தொடர்ந்து படிக்க முடியாததால் 1940 ஆம் ஆண்டில் வாழ்வாதாரம் தேடி வை. கோவிந்தனின் சென்னை 'சக்தி பத்திரிகை' அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தார். சக்தி இதழிலேயே "ஆளுக்குப் பாதி" என்னும் தம் முதல் கதையை எழுதினார்.

## எழுத்துப் பணி தொடக்கம்

சக்தியில் பணியாற்றிய போது வள்ளியம்மை என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் உள்ளனர்.

1941 -ல் சக்தியில் இருந்து விலகி இந்தியன் வங்கியில் சேர்ந்தார். 1982 -நவம்பரில் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை எழுதினார். ஓய்வுக்குப் பின்பும் எழுதிக் கொண்டுதான் இருந்தார்.

வங்கிப் பணியில் இருக்கும்போதே பாலர் மலர், டமாரம், சங்கு ஆகிய செய்தித் தாள்களுக்கு கௌரவ ஆசிரியராகப் பணியாற்றினார். 1951 முதல் 1954 வரை பூஞ்சோலை என்ற இதழுக்கும், ஓய்வு பெற்ற பின் 1983 முதல் 1987 வரை, கல்கி வெளியீடான கோகுலம் என்ற இதழிலும் ஆசிரியராக இருந்தார்.

குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 1950 -ல் குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

## இலக்கியம், நூல், கலை தொடர்பான பணியாற்றிய குழுக்கள்

- தமிழ்நாட்டு அரசினரின் குழந்தை இலக்கிய வளர்ச்சி - ஆராய்ச்சிக் குழு
- திரைப்படப் பரிசுத்தேர்வுக் குழு
- பாரதீய வித்யா பவன் ஆட்சிக்குழு
- தேசிய புத்தக டிரஸ்ட் ஆலோசனைக்குழு

# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

(கட்டுரை)

## நூல்கள்



- அழ. வள்ளியப்பா 11 பாடல் தொகுதிகள்,
- 12 புதினங்கள்,
- 9 கட்டுரை நூல்கள்,
- 1 நாடகம்,
- 1 ஆய்வு நூல்,
- 2 மொழிபெயர்ப்பு நூல்கள்,
- 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார்.

இவற்றில், 2 நூல்கள் இந்திய நடுவண் அரசின் பரிசும், 6 நூல்கள் தமிழக அரசின் பரிசும் பெற்றன.

## பாராட்டும் விருதும்

- 1963 இலக்னோ, அகில இந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் பதக்கமும் பாராட்டிதழும் வழங்கப்பட்டன.
- குழந்தைகள் இலக்கிய முன்னோடி, பிள்ளைக் கவியரசு, மழலைக் கவிச் செம்மல் என்று சில அமைப்புகள் பாராட்டி போற்றியுள்ளனர்.
- 1982 -ல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தினால் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்று விருதளிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்.
- 1982ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழக கல்விக்குழுவில் வாழ்நாள் உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்.
- 1970 நவம்பர் 22ஆம் நாள் "குழந்தைக்கவிஞர் இலக்கியப்பணி" வெள்ளிவிழா சென்னையில் நடைபெற்றது.

## பாராட்டும் விருதும்

- பூவண்ணன் தலைமையில் இயங்கிய பாலர் பண்பாட்டுக்கழகம் 1980ஆம் ஆண்டில் 'வள்ளியப்பா வானொலி-தொலைக்காட்சிச் சிறுவர் சங்கம்' என்னும் பிரிவைத் தொடங்கியது.
- 'பிள்ளைக்கவியரசு' என்னும் பட்டத்தை சென்னை பாரதி இளைஞர் சங்கம் வழங்கியது.
- 'மழலைக்கவிச்செம்மல்' என்னும் பட்டத்தை காரைக்குடி சர்வதேசக் குழந்தைகள் ஆண்டுவிழாக்குழு வழங்கியது.

## சில குழந்தை பாடல்கள்

"அணிலே, அணிலே, ஓடிவா!
அழகு அணிலே ஓடிவா!
கொய்யா மரம் ஏறிவா!
குண்டுப்பழம் கொண்டு வா!
பாதிப்பழம் உன்னிடம் பாதிப்பழம் என்னிடம்
கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்"

# குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

(கட்டுரை)

## சில குழந்தை பாடல்கள்

"மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
அல்வா போல மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கும் வேண்டுமா?
இங்கு ஓடி வாருங்கள்;
பங்கு போட்டுத் தின்னலாம்."



## இறப்பு :

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை கூட்டத்தில் கலந்து கொண்ட வள்ளியப்பா, 'குழந்தை இலக்கியத்தைப் பல்கலைக்கழக அளவில் பாடமாக வைக்க வேண்டும்' என்று வலியுறுத்திப் பேசி முடித்த நிலையில் மயங்கிச் சாய்ந்தார். 1989 மார்ச் 16-ல் கவிஞரின் உயிர் பிரிந்தது!

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com